

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘உயிர்ப்பிக்கும் விசுவாசமே’ நமது தேவை!

ஜெபித்தும், நீண்ட காலமாய் பதில் கிடைக்க தாமதமோ? இந்த தாமதம் நம் விசுவாசம் தோதிக்கப் படுவதற்குரிய பரீட்சையாகும்! நமக்கு கிடைத்திடும் **‘பதிலைவிட’ நமக்குள் இருக்கும் விசுவாசமே அதிக மதிப்புள்ளது!** வாக்குத்தத்த பூமிக்கு அழைக்கப்பட்ட ஆபிரகாம், பல வருடங்களாகியும் அதை அடையாமல் போனாலும்.... விசுவாசத்தோடே மரித்தான்!என சவாலிடும் வசனம் நம் நெஞ்சில் தங்குவதாக! (எபி.11:13). “அவர் என்னை கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையா யிருப்பேன்” என முழங்கிய யோபுவின் விசுவாசம், நம்மிலும் பற்றி எரிவதாக! (யோபு.13:15).

இந்த ஒப்பற்ற விசுவாசமே, யவீருவின் குமாரத்தி மரித்துப்போனாலும், லாசரு அடக்கம் செய்து நான்கு நாள் ஆகிப்போனாலும், அவர்களை உயிர்பெறச் செய்தது!

-*tr*


பெட்டகம் 23

பிப்ரவரி 2021

பரல்கள் 02



# தெய்வ அன்பில் சேதம் இருப்பதில்லை!

ஆம், திறந்து வைக்கப்பட்ட ஒரு அறையில், சூரியஒளி எவ்வாறு பாய்ந்து நிரப்புகிறதோ அதேபோலவே நம்முடைய இருதயத்தை தம்முடைய அன்பினால் நிறைத்து விடுவதற்கு தேவன் மகாவிருப்பம் கொண்டுள்ளார். நாம் சுவாசிக்கும் காற்று நம்மைச் சுற்றிலும் சூழ்ந்து நெருக்கி இருப்பதைப் போலவே, தன்னை சுவாசிக்க விரும்புவோருக்கு 'தேவ அன்பு' அவர்களைச் சூழ்ந்து நெருக்கி நிற்கிறது! அந்த அன்பு உள்ளே பிரவேசிக்க முடியாமல் அரை - குறையாய் கதவை திறந்து தடை செய்யாதிருங்கள்! நீங்கள் மாத்திரம் தடைகளை அகற்றி, முழு இருதய கதவையும் திறந்துவிட்டால், தேவ அன்பின் வெள்ளம் உங்கள் உள்ளம் புளகாங்கிதம் அடையும்படியாய் நிறைத்துவிடுவதைக் காண்பீர்கள்!!

நம்மை கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டுவதற்கு தெய்வீக அன்பைக் காட்டிலும் வலிமையான வல்லமை வேறு எதுவுமே இல்லை எனலாம். இந்த இரகசியத்தை சாத்தான் அறிந்திருக்கிறபடியால்தான், 'அன்பில் சேதம் உண்டாகும்படி' நம்மைத் தாக்கி, வெறும் "சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும்"குறுகித் தேய்ந்துவிடும் நிலைக்கு கொண்டுவர முயற்சிக்கிறான் (1கொரி.13:1).

*-Ed*

**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா**

*அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள்* **மார்ச் 10-ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில்* **3***பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.***125***/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.***900***/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **'புதிது'** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## "விசுவாச ஜெபம்" ஓர் இரகசியம்!

எத்தனையோ பல இரகசியங்கள் வேதத்தில் உள்ளன. ஏராளமாய் ஜெபித்துவிட்டு 'அதில் விசுவாசம் இல்லையென்றால்' நாம் ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டோம்! என கூறும், இந்த இரகசியத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? நாம் எதற்காக ஜெபித்தோமோ, அதைப் பெற்றுக்கொண்டோம் என மெய்யாகவே நீங்கள் விசுவாசித்திருந்தால்..... தேவனிடத்தில் **களிகூர்ந்து அவருக்கு நன்றி சொல்லாமல்,** நம்மால் இருக்கவே முடியாது! (பிலி.4:6). இதுபோன்ற களிகூருதல் என் உள்ளத்தில் இல்லையென்றால், நான் எதற்கெல்லாம் ஜெபித்தேனோ, அதை நான் பெற்றுக்கொள்ளவில்லை என்பதே தெளிவான விடை! இப்போதாவது, இந்த இரகசியத்தை விளங்கிக்கொண்டு, நீங்கள் ஜெபித்ததை நீங்கள் ஏன் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை தெளிவாய் அறிந்து கொள்ளுங்கள்.

> **உலக காரியங்களுக்கு ஜெபிப்பதைவிட, பரம காரியங்களுக்காக ஜெபித்து, அதைப் பெறாதவர்கள்தான் ஏராளமாய் இருக்கிறார்கள். உதாரணமாய், பாவத்தை ஜெயித்து வாழ்வதற்கும், இருதயத்தில் தெய்வ அன்பை பெறுவதற்கும் பல வருடங்களாய் ஜனங்கள் ஜெபிக்கிறார்கள். ஆனால், பாவத்தின் மேல் ஒரு துளி ஜெயமும் அவர்கள் பெறவில்லை! தெய்வ அன்பின் வாசனை கூட அவர்களுக்கு கிட்டவில்லை!**

நான் சற்று விளக்கிச் சொன்னதைப் போலவேதான் வேத வசனத்திலும் நாம் எல்லோரும் வாசிக்கும்படி வெளிப்படையாய் உள்ளது.... ஆகிலும் இந்த விசுவாசம், இன்னமும் மகா இரகசியமாயிருக்கிறது. இந்த வேத வசனத்தையே நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். 'விசுவாசம் இல்லாமல்' நாம் தேவனிடமிருந்து, ஒன்றும் பெற்றுக் கொள்ள மாட்டோம்!

ஆகவே, என்னுடைய விருப்பங்களை நான் திரும்பத் திரும்ப ஜெபித்துக்கொண்டேயிருந்து, அந்த ஜெபத்தில் விசுவாசம் இல்லையென்றால்.... செய்த ஜெபங்கள் உங்களுக்கு ஏற்பட்ட வீண் தொந்தரவு என்பதை அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள்

*விசுவாசத்துடன் ஜெபித்தவர்களாயிருந்தால் நீங்கள் ஜெபித்ததை பெற்றுக்கொண்டீர்கள்! என்பதே பேரானந்த நற்செய்தியாகும். அதாவது, இப்போது கையிலே வாங்கிக் கொண்டீர்கள் என்பதல்ல அதன் அர்த்தம். 'பதில் அனுப்பப்பட்டு விட்டது' இப்போது நானோ, அந்த அனுப்பப்பட்ட பார்சல் வந்து சேர்வதற்கு மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறேன்! நான் விசுவாசத்துடன் ஜெபித்த அந்த நேரத்திலேயே 'அந்த பார்சல்' அனுப்பப்பட்டபடியால், அது என்னிடம் வந்து சேருமென நிச்சயத்திருக்கிறேன்! அதுஏனென்றால் '***பரலோக அஞ்சல் நிலையம்***' பிழையில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது!*

**'முழு நிச்சயம்' கொண்டிருப்பதுதான் விசுவாசம்! நாம் எப்போது மகிழ்ந்து களிகூரமுடியும்? பார்சல் வந்த பிறகு அல்ல.... விசுவாசம் நம் உள்ளத்தில் வந்துவிட்ட அதே வினாடியில் நாம் மகிழ்ந்து களிகூர முடியும்!**

*எனவே 'இந்த சந்தோஷம்' உங்களுக்குள் வந்ததாக நீங்கள் உணர முடியவில்லையென்றால், அதற்கு என்ன காரணம்?* **நான் விசுவாசிக்க வில்லை** *என்பதே காரணம். இன்றுள்ள திரளான கிறிஸ்தவர்களின் நிலை என்ன தெரியுமா? எங்களுக்கு மிகுந்த விருப்பம் இருந்தபடியால், தேவனிடத்தில் ஜெபித்தோம், என்பதுதான்! இவ்வாறு நாம் விரும்பியதை ஜெபிப்பது எங்கள் நார்வே மொழியில் 'பூனை விசுவாசம்' என்று பெயர்! பசி எடுத்தவுடன், அந்த பூனை 'மியாவ்' என கத்தியது அவ்வளவுதான். அதுபோலவே ஒரு விஷயத்தைக் குறித்து நமது விருப்பப்படி பசியும் தாகமும் ஏற்பட்டுவிட்டால் உண்டாகும் ஜெபம் 'மியாவ்' என கூறும் முறுமுறுப்பான ஜெபமேயாகும். அது எப்படியெனில்: "அன்புள்ள தேவனே, இந்த நேரத்தில் எனக்கு உடனடியாக உதவி தேவை.... ஆனால் நான் விரும்பி ஜெபித்ததை நான் பெற்றுக்கொள்வேனா?" என தொனிக்கும் ஆத்திரமான முறுமுறுப்பு! இவ்வாறாக அவிசுவாசத்தை கலந்து வைத்து ஜெபிக்கின்ற ஜெபமே எண்ணற்றோரின் ஜெபமாயிருக்கிறது.*

**கேளுங்கள் விடையை : என் முழு இருதயமாய் நான் தேவனைத் தேடும் போது, அவர் என்மீது அளவில்லாமல் இரக்கத்தையும் அவருடைய கிருபையும் பொழிகின்ற நேரத்தில் 'என் துக்கம் நீங்கி மகிழ்ச்சி புரண்டோடுவதை' காண்கிறேன்! இங்குதான் நான் தேவனை விசுவாசிக்கும் பாக்கியம் கிட்டுகிறது!**

*இந்த பாக்கிய நிலையில், நான் ஏறெடுக்கும் ஜெபம், பேரானந்தம் நிறைந்த* **ஒரு புது மனிதன் ஜெபிக்கும் ஜெபமாய்** *மாறுகிறது! இவ்வா றாகவே, ஒரு ஜெபத்தைக் குறித்த காரியத்தில், விசுவாசம் பிறந்தவுடன் நான் உடனே தேவனைத் துதித்து, அவருக்கு நன்றிகூறி, அவரை*

*மகிமைப்படுத்தத் தொடங்குகிறேன்! அது ஏனென்றால், நான் ஜெபித்ததை 'இப்போதே' அவர் எனக்கு தந்துவிட்டார். ஜெபத்தில், இந்த இரண்டாவது பகுதியாகிய 'மகிழ்ச்சியும், நன்றியும்' உருவாகாத பட்சத்தில், ஒன்றையும் நாம் தேவனிடம் பெற்றுக்கொள்ள இயலாது!* **இந்த மகா இரகசியமான விசுவாசத்தை** *நான் பெற்ற அடுத்த கணமே "பதில் என்னும் பார்சல்" அனுப்பப்பட்டுவிட்டது! அதுஏனென்றால், பரலோகத்தின் விடை "விரைவு சேவையாய்"* (Express Service) *இருப்பதே காரணமாகும். நான் விசுவாசத்துடன் ஜெபித்ததைக் கண்ட தேவன், மிகுந்த வைராக்கியம் உடையவராய், முழு நிச்சயத்தோடு 'விரைவு சேவை மூலமாய்' எனக்கு அனுப்பி வைத்துவிட்டார்! இனி, நான் மகிழ்ந்து களிகூருவதற்கு காத்திருக்க வேண்டுமோ? நான் துதித்து, மகிழ்ந்து, என் தேவனை கொண்டாடுகிறேன்! விசுவாச துதியினால் உண்டான பலனை என் கைமேல் பெற்றுக்கொண்டேன்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## சத்தியம் விளங்கி விட்டதா? அதற்கு, பரீட்சை உண்டு!

*பரிசுத்த வாழ்க்கை இன்று வாழும் கிறிஸ்தவர்களுக்கு தூரமானதற்கு காரணம், உலகத்திலிருந்து இவர்கள் வேறு பிரிக்கப் பட்டு வாழவில்லை...... ஆகவே, பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் அவர்கள் மீது தங்கவில்லை. இன்னமும் உலகத்தை தங்களோடு வைத்துக்கொள்ளும் விசுவாசிகளிடம் பரிசுத்த ஆவியானவர் எப்படித் தங்குவார்? ஆகவே அவர்கள் பரிசுத்தமாயும் வாழவில்லை...... தேவன் தரும் மகிழ்ச்சியையும் பெறவில்லை!*

**இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளில் பேசும் சத்தியங்களில், மேலும் மேலும் 'தண்ணீர் ஊற்றப்பட்டு' நல்ல மருந்தாய் குணப்படுத்த வேண்டிய சத்தியம், இந்த தண்ணீரில் வடிந்து போய், அங்கு அமர்ந்திருக்கும் ஒருவரையும் சுகப்படுத்தவில்லை. இன்றைய திரள் கிறிஸ்தவ விசுவாசிகள், கிறிஸ்தவத்திற்கே அவமானமான, தரம் கெட்ட வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!**

*பல்லாண்டுகளாய் சத்தியத்தைப் பிரசங்கித்துவரும் நான், சத்தியத்தைக் கேட்ட ஜனங்களில் பெரும்பாலோர், பகிரங்கமான பிழையோடு வாழ்வதையே நான் காண்கிறேன்! இதுபோக, இன்னும் பலர்* **கற்பு ஒழுக்கத்தில் கூட தெய்வ பயத்தோடு வாழவில்லை.** *இவர்கள் வேத வாக்கியங்களின் கூர்மையை மழுக்கி, தேவனுடைய சித்தத்திற்கு வெளியேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் இன்னமும் மோசமான பின்மாற்றம் என்னவென்றால், தங்களின் தோல்வியை*

நியாயப்படுத்தி, அதை யாராவது கடினமாய் வலியுறுத்தி புத்தி கூறினால் 'முகம் சிவக்க' அவர்கள் மீது கோபம் அடைகிறார்கள்!

இனிமுதற்கொண்டு, இவ்வித தரம் குறைந்துபோன இன்றைய ஆவிக்குரிய நிலைமையை நீங்கள் பார்த்து ஆச்சரியப்படாதீர்கள்! இப்படியெல்லாம் சம்பவிக்கும் என வேதம் முன்கூட்டியே எச்சரித்து உள்ளது. அன்று இஸ்ரவேலர்களுக்கு தரப்பட்ட அதே எச்சரிக்கை தான் புதிய ஏற்பாட்டிலும் தரப்பட்டுள்ளது! அந்த இஸ்ரவேல் புத்திரர்கள் கடற்கரை மணலத்தனையாய் இருக்கும்படியே திரளாய் அழைக்கப்பட்டார்கள்..... ஆனால், அவர்களில் இரட்சிக்கப்பட்ட வர்களோ மிக குறைவாய் போய்விட்டனர். புதிய ஏற்பாட்டில் நமது ஆண்டவர் "**அநேகருடைய அன்பு குளிர்ந்துபோம்!**" என எச்சரித்து உள்ளார். வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் காணும் ஏழு சபைகளின் நிலைமையில், பெரும்பாலான சபைகள் 'சபை என்ற பெயரில்' இயங்கிக் கொண்டிருந்தன, அவ்வளவுதான்! ஆனால், அவர்கள் தங்களின் ஆதி அன்பை இழந்து, ஆவிக்குரிய தாறுமாறுகளையும் சபைக்குள் கொண்டுவந்து விட்டார்கள். இன்றைய நம்முடைய காலத்திற்கும், இவைகளை நாம் எச்சரிக்கையாய் மனதில் எடுத்துக் கொள்வோமாக.

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்றும்! ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்கள் என்றும்! திரண்டு வந்த ஜனத்திரளில் பெரும்பாலோர் "ஏதோ அபூர்வமான ஒன்றில் ஆர்வம் கொண்டார்கள்" அவ்வளவு தான். இவ்வாறு அபூர்வங்களைக் கண்ட பரவச மக்களுக்கென்றே, 'ஆழ்ந்த சத்தியங்கள்' எனக் கூறும் புத்தகங்கள், புத்தக சாலையில் நிரம்பி வழிகின்றன.

**இந்த வெறும் ஆர்வத்தோடு சத்தியங்களைக் கேட்ட திரளானோர், அதன்படி வாழ்வதற்கு ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை! வெற்று ஆர்வத்தைக் காட்டினார்கள்! கைக்கொள்ளும்படியான தீராத வாஞ்சையோ அவர்களுக்கு இல்லை!**

'இவர்களையெல்லாம் பிரித்து எடுக்கும்' அந்த கடினமான செயலை தேவனிடமே விட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய சோதனை களை, தேவனுடைய ஆவியானவர் மாத்திரமே வைத்திட முடியும். வேத வாக்கியங்களில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் 'அவர்களே அறியாமல்' பரிசுத்த ஆவியினால் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும், பரிசுத்த ஆவியானவரோ ஒரு நபரிடம் கூட "நீங்கள் சோதிக்கப்பட போகிறீர்கள்" என முன் கூட்டியே கூறியதில்லை!

முற்பிதாக்களில் முதல்வரான **ஆபிரகாம்** சோதிக்கப்பட்ட

*நிகழ்ச்சியைப் பாருங்கள்! கல்தேயர் தேசத்தின்* **ஊர்** *என்ற இடத்தைவிட்டு தேவன் புறப்படச் சொன்னபோது, தான் சோதிக்கப் படுகிறேன் என ஆபிரகாம் அறியவில்லை. அதேபோல், உன் ஏக புத்திரனை மோரியா மலையில் பலியிடு! என ஆண்டவர் ஆபிரகாமிடம் கூறியபோதும், தான் கீழ்படிவதற்கே கட்டளையிடப் பட்டதாக எண்ணினார்! ஆனால், தான் தேவனால் சோதிக்கப் படுவதாக சிறிது கூட அறியவில்லை. அதுபோலவே, தான் சோதிக்கப் படுவதை அறியாமலே* **பேதுரு** *சோதிக்கப்பட்டார்!* **பவுலும்** *அவ்விதமாகவே சோதிக்கப்பட்டார்! நாம் ஏராளமான சத்தியங்களை அறிந்து கொண்ட பிறகு, பரிசுத்தஆவியானவர் கூறுவார்* **"இன்று இந்த மனுஷனுக்கு, நான் ஒரு பரீட்சை நடத்துவேன்!"** *என்பார்.*

*இஸ்ரவேல் ஜனங்களுக்கு 'காதேஸ் பர்னேயாவில்' பரீட்சை நடந்தது. அவர்களோ, நதியை கடந்து போவதற்கு பதிலாய், தாங்கள் பரீட்சிக்கப்படுகிறோம் என்பதை அறியாமலே, பின்னிட்டு திரும்பினார்கள். "தாங்களே, தங்களுக்கு 40 - வருட தண்டனையை வருஷித்துக் கொண்டோம்" என்பதை அறியாதிருந்தார்கள். எந்த இலக்கும் இல்லாமல், பிரயோஜனமற்ற வாழ்க்கையை, அந்த தரித்திர பாலைவன நிலத்தில் வாழ்ந்து மடிந்தார்கள்.*

> **ஆண்டவர் அவர்களைப் பார்த்து "எல்லோரும் எழுந்து நில்லுங்கள்! கவனம். நான் இப்பொழுது உங்களுக்கு கூறுவது பரீட்சை!" என அவர்களுக்கு கூறவேயில்லை. ஆனால் 'அவர்கள் அறியாமலே வந்த' பரீட்சையில் வீழ்ச்சியுற்று மடிந்தார்கள்.**

*ஒரு உண்மை கேளுங்கள்: தேவன் தரும் பரீட்சையில், கிறிஸ்தவ விசுவாசிகளில் 90 சதவீதம் கொண்டோர், பிசாசினால் உண்டான பாவத்திலும், மாம்ச இச்சையிலும் வீழ்ச்சியடைந்தார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்வது உங்கள் உள்ளத்திற்கு அதிகமான தெய்வ பயத்தை கொண்டு வர வேண்டாமா?*

*புடைத்து, சலித்து எடுக்கும் பணியை இன்றும் ஆண்டவர், நாள்தோறும் செய்து வருகிறார் என்ற விழிப்புணர்வை நாம் யாவரும் அடைவது நலம்! தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் பூரணமடைய வேண்டும் என்ற விருப்பத்தையும், இயேசுவைப் போல் மாற வேண்டும் என்று தீராத வாஞ்சையும், சத்தியத்தில் நிலை நிற்க உறுதிகொண்ட வர்கள் உங்கள் சபையில் இருக்கிறார்களோ? அப்படியானால், இந்த கேள்வி, மாபெரும்* **பரீட்சைக்குரிய கேள்வியாக** *அவ்வித சபைகளின் மேல் ஜொலித்து நின்று, தேவனுடைய 'சலிப்பு வேலையை' தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டேயிருக்கும்!*

– *A.W.* டோசர்

## குற்றம் சாட்டினவர்கள் மத்தியில், தெய்வ அன்பு வளர்ந்தது!

*பாரீஸ் நகரத்திலிருந்து, சுமார் 20கி.மீ தூரத்திற்கு அப்பாலுள்ள ஆற்றின் படுகைக்கு வந்து சேர்ந்தோம். அந்த இடம் மிக நன்றாயிருந்தது. இங்குதான், என் ஆரம்ப கிறிஸ்தவ ஜீவியத்தில் 'கர்த்தருடைய அன்பிற்குள்' என்னை நடத்திய தேவ மனிதரை மீண்டும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. நான் கர்த்தருக்கென்று சகலத்தையும் அர்ப்பணித்து விட்டு, பாரீஸிலுள்ள "புதிய கத்தோலிக்க முறை" அமைப்பில் நான் சேர்ந்து கொண்டதைக் கூறினேன். அதற்கு அந்த தேவ மனிதன் "நீங்கள் சகலத்தையும் கர்த்தருக்கு அர்ப்பணித்ததை நானும் மனப்பூர்வமாய் அங்கீகரிக்கிறேன்! ஆனால், இந்த புதிய கத்தோலிக்க முறைமையின் அமைப்பில் நீங்கள் இணைந்திருப்பது 'உங்களுக்கு உகந்ததாக இருக்காது' என கருதுகிறேன்!" என்று கூறினார். அவர்களைக் குறித்து 'ஏதோ சில காரியங்களை' என்னிடத்தில் குறிப்பிட்டார். மேலும் என்னைக் குறித்து அவர் எச்சரித்தது என்னவென்றால் "நீங்கள்* **கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து வரும்,** *புனிதமான சிலுவையின் அந்தரங்க ஜீவியத்தை" இந்த அமைப்பிலுள்ள ஒருவருக்கும் கூறிவிடாதீர்கள்! நீங்கள் அப்படிச் செய்தால், அவர்கள் மூலம் ஏராளமான உபத்திரவங்களை சந்திக்க வேண்டியதாயிருக்கும் என எச்சரித்து சென்றுவிட்டார். ஆனால்! என் உள்ளமோ* **நான் பாடுகளை அனுபவிப்பதுதான் மேலானது என தேவன் கண்டிருந்தால்,** *எதையும் சூச்சமாய் மறைப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை! என்றே உணர்ந்தேன். என்னுடைய சுய சித்தம் முழுவதையும் நான் தேவனுக்கென்று இழந்த பிறகு, 'அவரே என் முழுமையும்' என மாற்றம் கண்ட பிறகு, நான் பாடுபடுவதுதான் கர்த்தருடைய பார்வையில் நலமாயிருந்தால், எதையும் மறைத்து வைத்திருக்கும் உபாயத்தில் பயன் ஏதும் இல்லை என்பதை உணர்ந்தேன்.*

*நான் புதிய கத்தோலிக்க முறையின் ஊழியத்தில் சேர்ந்தபோது, என் கையில் வைத்திருந்த எல்லா பணங்களையும் அவர்களிடம் கொடுத்து விட்டேன். என் வீட்டிலிருந்து, பல இலட்சங்கள் கொண்டு வந்திருந்தேன். எனக்கென்று ஒரு ரூபாய் கூட நான் எடுத்து வைத்துக் கொள்ளவில்லை!*

**இயேசு கிறிஸ்து எனக்காக முன் வைத்த மாதிரியை கவனித்து "அவரைப் போல் ஏழையாய் மாறியதினிமித்தம்" அதிக மகிழ்ச்சி அடைந்தேன். என்னிடத்திலுள்ள முழு பணத்தையும் நான் கொடுத்த பிறகு, எனக்கென்று தேவைக்கு யாதொரு ஏற்பாடையும் நான் செய்து கொள்ளவில்லை!**

இவ்வாறாக, ஏழ்மையை நான் வசப்படுத்திக் கொண்டேன். இதைத் தவிர எஞ்சிய பணங்களை, என்னோடு இருந்த கன்னிமார்களுக்கு கொடுத்து, அதைக் கொண்டு அவர்களின் பயண செலவுகளுக்கும் மற்றும் வீட்டு உபயோக தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொண்டேன். எனக்கென்று புதிய துணிமணிகளை வாங்குவதற்கு வெகு சிறிய தொகை மாத்திரமே வைத்துக்கொண்டு, கர்த்தருடைய பணிக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன்!

என் முழுமையும், ஊழிய அர்ப்பணத்திற்கு கொடுத்த பிறகு எனக்கென்று பூட்டி வைக்கும் ஒரு பணப்பெட்டியோ அல்லது ஒரு சிறிய மணிபர்ஸ் கூட வைத்துக்கொள்ளவில்லை! என் அரண்மனை வீட்டிலிருந்து, மாற்று உடைகள் வெகுசில மாத்திரமே கொண்டு வந்திருந்தேன்.

*இதையெல்லாம் நான் எழுதுவதற்கு காரணம், என்னை பொய்யாய் குற்றம் சாட்டி துன்புறுத்திய சிலர், அரண்மனை வாசத்தில் தொடர்ந்து என்னை வன்கண்ணோடு பகைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் ஏற்கெனவே 'ஒரு பெருந் தொகையை' அரண்மனை வீட்டிலிருந்து நான் எடுத்துச் சென்று ஆடம்பரமாய் செலவழிப்பதாகவும், தந்தை லா-கோம்பேக்கும் அவருடைய நண்பர்களுக்கும் இஷ்டத்திற்கு பணம் வாரி இரைத்ததாகவும் குற்றம் சாட்டி பரப்பியிருந்தார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி என் கையில் பணமில்லாதிருக்கும் போது, இப்படியெல்லாம் தவறாய் என்னை குற்றம் சாட்டி, என்னுடைய நற்பண்பின் மீது களங்கம் கற்பிக்க முயற்சித்தார்கள். விந்தை என்னவென்றால், இவ்வித விரோத செயலின் மத்தியில், என் இருதயத்தில் 'தெய்வ அன்பு' வளர்ந்ததைக் கண்டேன்!*

எனக்கு நிகழ்ந்த நடைமுறை ஜீவியம் என்னவென்றால் 'அனசி' (Annecy) சிறு பட்டணத்திற்கு நான் வந்தபோது, என் அரண்மனை ஆடையை பார்த்தவுடன், ஒரு ஏழை மனிதன் யாசகம் கேட்டார். என்னிடத்தில் பணம் வைத்திராதபடியால், நான் உடுத்தியிருந்த உடுப்பிலுள்ள விலை உயர்ந்த ஓர் பட்டனை அவிழ்த்து அவருக்கு கொடுத்துவிட்டேன்! மற்றொரு முறை, ஒரு ஏழை மனிதன் என்னிடம் யாசகம் கேட்டபோது, என் கணவர் மரித்த பிறகு, இயேசு கிறிஸ்துவை என் மணவாளனாய் நிச்சயித்து அணிந்திருந்த தங்க மோதிரத்தை கழற்றி, அவருக்கு கொடுத்து விட்டேன்! என்பதுதான்.

நாங்கள் மேலன் (Melan) வந்து சேர்ந்தவுடன் சகோதரி கார்னியர் அங்கேயே தங்கிவிட்டார்கள். நானும், என் மகளும் முன்பின் அறியாத சில சகோதரிகளோடு சேர்ந்து, அரண்மனை குதிரை வண்டியோடு

*திரும்பி வந்தேன். வண்டியில் நெருக்கமாய் உட்கார்ந்தபடியால் 'மயங்கும்' நிலை எங்களைத் தாக்கியது. முழு பயணத்திலும், என்னால் சிறிதுகூட தூங்கமுடியவில்லை! என் 5 வயது கொண்ட இளம் மகள் வண்டியில் படுத்து தூங்க முடியாமல் தத்தளித்தாள். இவ்வாறு, மயக்க நிலையில் பயணித்த நாங்கள் யாவரும் வியாதிப்படாமலிருந்தது மிகுந்த ஆச்சரியமேயாகும். இத்தனை துயரத்தின் மத்தியிலும், என் உள்ளத்தில் அமர்ந்து வாசம் செய்த மிகப்பெரிய சந்தோஷம் என்னவென்றால்* **"என்னை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புவித்து விட்டேன்!" என்ற எனது காணிக்கையேயாகும்.** *இதுபோக, என்னிடத்தில் இராஜ்ஜியங்களும், பேரரசுகளும் இருந்திருக்குமென்றால், அவைகளையும் நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் என் கர்த்தாவிற்கு கொடுத்திருப்பேன்! இவ்வாறு, என் அன்பை தேவனுக்கு காட்டுவதற்கு, கொடுக்க வேண்டிய அனைத்தையும் கொடுத்து விடுவதற்கே என் உள்ளம் வாஞ்சித்தது!*

– *மேடம் குயான்*

---

## ஆவியில் நிறைந்தவனே! 'எப்போதும்' துதிகீதம் நிறைந்தவன்!

*மூன்று வாலிபர்கள்.... சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ! இவர்கள் முன் இருந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?.... கொடிய "எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை" அந்த அக்கினிச் சூளை, வேறு யாருக்கும் அல்ல 'இவர்களைத் தூக்கி போடுவதற்கே' எரிந்து கொண்டிருக்கும் அக்கினி சூளை! ஆகிலும் இந்த எபிரெய வாலிபர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? அது* **அக்கினி சூளையைவிட இன்னும் வலிமையான அறிக்கை** *என்றே கூற வேண்டும். இந்த மூன்று இளைஞர்கள், அந்த எரிதழலை மூட்டிய ராஜாவைப் பார்த்து "நேபுகாத்நேச்சாரே, இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்" (தானி.3:16,17). பார்த்தீர்களா? நன்றாய் கவனியுங்கள், இந்த காரிருள் நேரத்தில்,* **ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்காவிடில்** *இத்தனை வலிமையான துதியின் அறிக்கையை கூறவே இயலாது!*

> **உங்கள் வீட்டின் மாடியில் இருக்கும் உங்கள் மகள் "அம்மா! அம்மா! அண்ணன் பீரோ கண்ணாடியை உடைத்து விட்டான்! என் காலில் இரத்தம் கொட்டுகிறது" என கூவி அழும்போது, உங்கள் முழு வீடும் ஆத்திரமும், அவசரமும் அடையும் அல்லவா? இந்த சூழ்நிலையிலும் நீங்கள் ஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்தால், அமைதியாய் இருக்கவும், தொடர்ந்து ஸ்தோத்திரம் செய்யவும் முடியும்!**

மற்றொரு உதாரணத்தைப் பாருங்கள். பவுல் கூறினார் "**ஒன்றும் இல்லாதவர்களென** எண்ணப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவே எங்களை விளங்கப்பண்ணுகிறோம்" என கம்பீரமாய் கூறினார் (2கொரி.6:10). யாரால் இப்படி கூற முடியும்? ஒருவனுக்கு பணம் இருந்தால் மாத்திரமே, வங்கியில் சென்று பணம் எடுத்துவர அமைதியாய் இருப்பான்! ஆனால் **'ஒன்றுமில்லாமலே' சகலமும் இருப்பதைப்போல் அமைதி காணும்** ஓர் நிலை, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும்! ஒருவகையில் இதுபோன்ற நிலை "மதுபான வெறி கொண்டவர்களுக்கு" மாத்திரமே சம்பவித்திட முடியும். எது இல்லாவிட்டாலும், மதுபான வெறிகொண்டவன் பாடுவான், தைரியமாய் நிற்பான், கலகலவென்று பேசுவான்! இது எப்படி சம்பவித்தது? அவன் 'வேறு ஒரு ஆவியில்' இப்போது இருக்கிறான். இதுபோலவே ஆவிக்குரிய மனுஷன், எந்த சூழ்நிலையிலும்.... "பரிசுத்த ஆவியை சார்ந்து கொண்டு" துதி ஏறெடுக்க முடியும்!

துன்மார்க்கத்திற்கென குடிப்பவன், முதலில் ஒரு கிளாஸ் குடிக்கிறான்.... அது அவனுக்குப் போதாது.... **தொடர்ந்து பத்து கிளாஸ் குடித்து மதுபான வெறி நிலை அடைகிறான்!** இந்த நிலையில்தான், அவன் தடுமாறும் பாடல் பாடி மகிழ்ச்சியாயிருக்கிறான். அதுபோலவே, பரிசுத்தஆவியைப் பருகி.... உங்கள் இருதயம் நிறையும்வரை பருகுங்கள்!

**இவ்வாறு நிரப்பப்பட்டவன்தான் 'அந்த வெறி கொண்டு' எப்போதும் சங்கீதம் பாடி.... எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்பான்!**

மிகக் கொடிய சூழ்நிலை ஏற்பட்டதாக எண்ணி நீங்கள் துவண்டு போனீர்களோ? ஸ்தோத்திரம் செலுத்த விரும்பியும், உங்கள் உள்ளத்தில் இளைப்பாறுதல் இல்லையோ? இப்போது உங்களுக்குத் தேவையானது ஒன்றே ஒன்றுதான்! அந்த மனுஷனைப் போல.... தூய ஆவியைப் பருகி பருகி, இருதயம் நிரம்பும் வரை பருகுங்கள்! எதுவரை இவ்வாறு நிறைய வேண்டும்? உங்கள் இருதயம் ஆவியின் வலிமை கொண்டதாய், அந்த இருதயத்தை கர்த்தரே முழுவதும் ஆட்கொண்டதாய், **கர்த்தருடைய மகிழ்ச்சியினால் பொங்கும்வரை ஆவியைப் பருகுங்கள்!** இதுபோல கர்த்தருடைய ஆவியினால் வெறிகொள்ள உங்களால் முடியுமா? ஒரு துன்மார்க்கன் தன் குடியில் வெறிகொள்ள முடியுமென்றால், உங்களாலும் முடியுமென்றே வேதம் திருஷ்டாந்தப் படுத்துகிறது! ஆகவே, கண்டிப்பாய் முடியும்! எளிய விசுவாசம் கொண்டவனுக்கு முடியும்! ஆவியை குடித்து பருகிட "**தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவனுக்கு**" முடியும்! இதற்கு, இந்த அற்புத செயலுக்கு, **உங்கள் விசுவாசம்** உங்களுக்கு துணை நிற்கக்கடவது!

குடித்து.... வெறித்து ஆனந்த களிப்படைந்தவன் மாத்திரமே 'எல்லாவற்றிற்காகவும்' ஸ்தோத்தரிப்பான்! அதுமட்டுமல்ல, அவன் எல்லோரையும் பார்த்து "நீங்களும் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என மிகுந்த ஆர்ப்பரிப்புடன் கூறுவான்!!

இவ்வித செழித்த நடைமுறை வாழ்விற்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவனின் கட்டளைக்கு செவி சாய்ப்போமாக! அது என்னவெனில் *"நீங்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது"* (1தெச.5:18).

மீண்டும், முடிவாய் கேளுங்கள்: நீங்கள் மதுபானத்தினால் வெறி கொள்ள வேண்டாம்.... ஆனால், தயவாய் "ஆவியினால் நிரம்பி வழியுங்கள்" அப்போது உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுவது மாத்திரம் அல்லாமல், எல்லாவற்றிற்காகவும் பிதாவை ஸ்தோத்தரித்திட முடியும்! நிச்சயமாய் முடியும்!! (எபே.5:18,19,20) ஆமென்.

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## உபதேசமல்ல 'வாழ்ந்திடும் ஒளியே' ஜீவன் தரும்!

இமாச்சல பிரதேசத்தில் "கொட்கார்" என்ற ஸ்தலத்தில் திடீரென்று மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது! 'நம் சாது வந்து விட்டார்.... நம் சாது வந்து விட்டார்!' என்ற ஆரவாரம் காட்டுத் தீ போல் கொட்கார் ஸ்தலம் முழுவதும் பரவியது. இந்த செய்தி கேள்விப்பட்ட ஒரு கும்பல் ஆனந்த கூத்தாடி, கண்ணீர் வடித்தார்கள்! சாது சுந்தர்சிங் தங்கி இருந்த குகையை நோக்கி ஓடியவர்களில், கால் நொண்டி நொண்டி நடந்து சென்ற பெண் பிள்ளைகளும், பரட்டை தலையோடு மகிழ்ச்சியுடன் ஓடிய பையன்களும், கூட்டமாய் சென்ற குஷ்டரோகிகளும் அடங்குவர்! தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களும் ஆனந்தமாய் அவரைத் தேடி ஓடினார்கள். "**எங்களுக்காக அல்லவோ சாது திரும்பி விட்டார்**" என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு, ஏதோ நித்திய கன்மலையை கண்டதுபோல் ஓடினார்கள்!

விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் சாது சுந்தர்சிங் அவர்களை சந்தித்த காலத்தில், அங்கிருந்த அனைவருமே மனம் திரும்பி இரட்சகரின் ஒளியை கண்டடைந்தார்கள். அவர் சந்தித்த சிறு பிள்ளைகள் எத்தனை பேரோ அத்தனை பேர்களுடைய இருதயத்திலும் **இயேசுவின் ஜீவனை** சாதுசுந்தர்சிங் விதைத்தார்.

அந்நாட்களில், சாது அவர்களுக்கு C.F.ஆண்ட்ரூஸ் என்ற நெருங்கிய நண்பர் இருந்தார். அவர் சாது சுந்தர்சிங்கைப் பற்றி கூறும்போது: "சுந்தர்சிங் இமாச்சல் பட்டணத்தில் இருக்கும்போது, தன்னுடைய உபரி நேரத்தை பள்ளி வாலிப பையன்களோடு அதிகமாய் செலவழித்தார். இரவில் நீண்ட நேரமாய் இந்த வாலிப பையன்கள் கொட்காரில் அவர் தங்கி இருந்த குகைக்கு முன்பாக அமர்ந்து, சாது சுந்தர்சிங்கின் பிரகாசிக்கும் முகத்தை கண் இமைக்காமல் உற்று நோக்கி, அவர் கூறுவதை பேரார்வத்துடன் கேட்பார்கள். அவருக்குள் இருந்த விசுவாச தைரியமும், துணிச்சலும் இந்த இளைஞர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டது!" எனக் கூறினார்.

இந்த மாணவ இளைஞர்களிடம் ஏற்பட்ட மாறுதல் மிக ஆச்சரியமானது. ஒரு சமயம் இந்திய புகழுக்கு விளையாட்டு வீரனாய் திகழ்ந்த ஒரு மாணவன், IAS இந்திய அரசாங்க பணி தனக்கு கிடைத்த போதும், அதை உதறிவிட்டு, கிறிஸ்துவுக்கு தொண்டாற்ற முன் வந்தார். மிகப் பெரும் திறமை கொண்ட மற்றொரு மாணவன், சபையின் ஊழியத்திற்கு தன் ஜீவனை தியாக பலியாக ஒப்படைத்து, கிறிஸ்துவின் மீதுகொண்ட தனது அன்பை வெளிப்படுத்தினார்!

இமாச்சல் பிரதேசத்தில் 'தீண்டாமை' தலை விரித்து ஆடிய கொடிய காலம்! ஒரு உயர்நிலை பள்ளியில் தீண்டத்தகாத, துப்புரவு பணியாற்றிய ஒரு தோட்டி, கொடிய விஷக் காய்ச்சலால் தன் சேரியில் மரண தருவாயில் அவஸ்தைப்பட்டார். சாது அவர்களின் அன்பின் **சீஷனாய் விளங்கிய** ஒரு மாணவ இளைஞன், உயர் வகுப்பை சேர்ந்த அவன், தீண்டத்தகாத தோட்டியின் குடியிருப்புக்குச் சென்று, சுகவீனமாய் கிடந்த பள்ளியின் தோட்டிக்கு அனைத்து உதவிகளையும் ...... அந்த சேரியில் தங்கி, நல்ல சுகத்துடன் அந்த தோட்டி பள்ளிக்கு திரும்பி வரச் செய்தான்! இதுபோன்ற செயல், இமாச்சல உயர்குல மக்களிடையில் அந்நாட்களில் சம்பவித்தது, ஒரு மாபெரும் அற்புதம் என்றே சொல்ல வேண்டும்.

இமாலய மலையில், கொடிய வயிற்று வலியில் சுருண்டு சாகக் கிடந்த ஒரு மனுஷனை, சாதுவோடு அமர்ந்து உபதேசம் கேட்ட ஒரு பையன், அவரைத் தன் முதுகில் போட்டுக்கொண்டு சுமார் 2 மைல் அந்த மலையின் கரடுமுரடான பாதையில் நடந்துவந்து, அவர் உயிரை காப்பாற்றினான். தொற்று நோயில், அழுகி இருந்த அந்த மனிதனை உயர்குல வாலிபன் தூக்கிவந்த செயலுக்கு 'ஒரே காரணம்' சாது அவர்களோடு சேர்ந்து பெற்றுக்கொண்ட **இயேசுவின் தியாக ஆவியே** ஆகும். அவன் தூக்கி வந்த செயலைவிட, **அவனிடமிருந்து ஒளி வீசிய**

**அன்பின் சுடரே** *அன்று எல்லோர் மனதையும் பரவசப்படுத்தியது!*

*சாதுவை சூழ்ந்திருந்த மக்களில், 'குறிப்பாய்' வாலிபர்களின் உள்ளத்தை மாற்றிய மகிமை சொல்லி முடியாதது!*

> **ஒரு மனுஷீகமான ஆறுதல், ஒரு மனுஷீகமான தியாகம், ஒரு மனுஷீகமான அன்பு.... ஆகிய யாதொன்றும் ஒரு மனிதனை இந்த அளவிற்கு மாற்ற இயலாது. அதுபோன்ற அரை - குறை தியாக புருஷர்களைக் கண்ட இந்த வாலிபர்களின் உள்ளங்கள் ஆழமாய் கவரப்பட்டதில்லை! ஆனால் *சாது சுந்தர் சிங்கின்* வாழ்க்கையோ முற்றிலும் அனல் கொண்ட தியாகச் சுடராய் இருந்தது. அவர் தனக்காக வாழ்ந்தார் எனச் சொல்வதற்கு, துருவி துருவி பார்த்தாலும், யாதொரு தடயமும் யாதொருவராலும் காண முடியவில்லை!**

*அவர் மனப்பூர்வமாய் உவந்தளித்த செல்லும் செலவு, இயேசு கிறிஸ்துவின் தியாகத்தோடு மாத்திரமே ஒப்பிட முடியும். அவர் ஜீவித்த காலம் வரை ஜனங்களிடத்தில் 'சிலுவையை' வானளாவ புகழ்ந்து பிரசங்கித்தார். இருப்பினும் அதுவல்ல அவரது வாழ்வின் இரகசியம்! அதைவிட மேலாய்* "**அவர் சிலுவையை தழுவி வாழ்ந்தார்!**" *என்பதே அவரைக் குறித்த இரகசியமாய் இருக்கிறது! இவ்வழி செல்லும் வாலிப உள்ளங்கள், இன்று நம்மிடத்தில் உண்டோ? இதுவே உங்களைச் சந்திக்கும் மிகப்பெரிய கேள்விக்குறி.... பதில் உங்களுடையதாய் இருக்கட்டும்! ஆமென்.*

*– சாது சுந்தர்சிங்*

---

## பக்தியற்ற கமிட்டியாரால், அல்லல்படும் தேவதாசர்கள்!

*சபைகள் வெகுகாலமாக, தன்னலமற்ற மிஷனெரிமார் பார்வையிலிருந்தன! அவைகள் சுய ஆதரவும், சுய ஆளுகையு முள்ளதாக வேண்டுமென்று முயற்சி எடுத்ததின் பேரில்,* **பல சபைகள் சுயாதீனம் பெற்று** *ஓங்கி வளர்ந்தன!*

*சில காலங்களுக்குப் பிறகு, போதகர்களோடு சேர்ந்து சபையின் காரியங்களைக் கவனித்து நடத்த* **சபை கமிட்டிகள்** *ஏற்பட்டன. கமிட்டி அங்கத்தினர்கள் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்தால், சபைக்கு எவ்வளவோ ஆசீர்வாதமாயிருந்திருப்பார்கள். பொதுவாய் அப்படி வாய்க்கிறதில்லை! கமிட்டி அங்கத்தினர்களாய் தாங்கள் தெரிந்து கொள்ளப்படுவதற்கு, சட்ட சபையிலும், நகர சபையிலும் தேர்தல் நடக்கும் காலத்தில், பணங்களைச் செலவுசெய்து ஓட்டர்களைச் சம்பாதிப்பது போலவே, கிறிஸ்தவ சபைகளிலும் நடப்பது, எவ்வளவு விசனமான காரியம்!* **மெய்யான தேவ பக்தியுள்ளவர்கள்,** *தங்களை சபை*

கண்காணிகளாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆத்திரப்படமாட்டார்கள். நாம்தான் அவர்களை வருந்தி அழைக்க வேண்டும்! அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டால், **தேவசித்தம்** என ஏற்றுக்கொண்டு, சபையின் நல்வாழ்வுக்காக போதகரோடு சேர்ந்து உழைப்பார்கள். தெரிந்துகொள்ளப்படவில்லையென்றால், தேவ சித்தத்திற்கு கீழடங்கி, எப்போதும்போல அமைதியாய் நடந்து தொடர்ந்து, கர்த்தருக்கு ஊழியம் செய்து கொண்டேதான் இருப்பார்கள்!

**உண்மையில், கமிட்டி மெம்பர்கள், தெய்வ பயம் நிறைந்தவர்களாய், போதகர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் ஊழியத்திற்கு ஆதரவாயிருக்க வேண்டியவர்கள்! துரதிருஷ்டவசமாய், எல்லோரும் அப்படி நடக்கிற தில்லை. போதகர்களை ஆள வேண்டும், அவர்களை ஆட்டி வைக்க வேண்டும் என்கிற தன்னல நோக்கங்கொண்ட கமிட்டி மெம்பர்களே இன்றைய சபைகளில் இருக்கிறார்கள்!**

சபை ஊழியர்களான உபதேசிமார், சபை வளாகப் பொறுப்பாளர், தோட்டக்காரர் முதலானவர்கள், தங்கள் பிழைப்புக்காக சந்தர்ப்பம் போல் சாய்கிறவர்கள்! கமிட்டிமாரின் கை பலமாயிருந்தால், இவர்கள் கமிட்டிமார் தயவைச் சம்பாதிக்கப் பார்ப்பார்கள்! போதகரைப் பற்றி தரக்குறைவாய் கமிட்டிமாருக்குச் சொல்லி, அவர்களுடைய அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளுவார்கள். 'கமிட்டி மார் ஆதரவு' என்ற தைரியத்தினால், சபையில் உடனிருந்து பணி செய்பவர்கள் கூட, ஆவிக்குரிய தங்கள் போதகர்களை மதிப்பதில்லை!

ஆகவேதான், வேதம் கூறுகிறபடி, சாட்சி நிறைந்த **தேவ பக்தியுள்ள வர்களை மாத்திரமே,** கண்காணிக்கும் உதவிக்காரராகத் தெரிந்தெடுப்பது நல்லது (1தீமோ.3:8-10). உலகப்பிரகாரமான 'ஓட்டெடுப்பு' 'மெஜாரிட்டி' பார்ப்பதை குப்பையில் எறிந்து விடுங்கள்!

தேவ பக்தி அடிப்படையில் தெரிந்துகொள்ளப்படாத கமிட்டி மார்கள், போதகர்களைப் பார்க்கிலும் சகல விஷயத்திலும் மேலான அந்தஸ்துள்ளவர்களாயிருப்பதாலும், சபைக் காரியங்கள் இவர்கள் விசாரணைக்குள்ளிருப்பதாலும், இவர்களின் தயவு போதகருக்கு வேண்டியதாயிருப்பதுபோல் தோன்றுகிறது! இவர்களால் தங்களுக்கு எந்த வகையிலும் கஷ்டம் நேரிடாதபடி போதகர்களும் இவர் களுக்குப் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டிய இழிநிலையும் ஏற்படுகிறது! **போதகர்களை மிரட்டும் பக்தியற்ற 'கமிட்டிமார்களும்' உண்டு!!**

ஆகவே, சபை போதகர் தங்கள் பதவியை பாதுகாக்க, கமிட்டி மார்களிடமும், சபை வளாக பணக்காரரிடமும், சபையாரிடமும் பக்குவமாய் நடந்துகொள்ள வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுகிறது!

*இப்படியெல்லாம்* **ஆவிக்குரிய தேவ ஊழியர்கள்** *மாறுவது கேவலம் இல்லையா? இதுவா கர்த்தருடைய உன்னதமான ஊழியம்?*

*இவைகளைக் கவனிக்கும்போது, தேவனைச் சேவிப்பதிலும் மனுஷரைச் சேவிப்பதே அவர்களுக்கு பிரதானமாகத் தோன்றுகிறது. "நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்?* **நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே**"*(கலா.1:10) என்ற வேதவாக்கியமெல்லாம், இன்று காற்றில் பறந்துவிட்டது! சபை ஊழியத்திற்கு, பெரிய மனுஷாளுடைய ஆதரவு (கமிட்டிமார் ஆதரவு) வேண்டியதிருப்பதால், அவர்களைப் பிரியப்படுத்தும்படியான சோதனை அல்லது பலவீனம் இன்றைய தெய்வ ஊழியர்களுக்கு நிறையவே உண்டு!*

*காரியத்தின் கடைத்தொகையாய், எக்காலத்தும் மனுஷீகமாய் செயல்படும் கமிட்டிமாருக்கு 'அஞ்சாத ஊழியர்களே' கர்த்தருக்குத் தேவை! இவர்களே, தேவன் மீது தங்கள் முழு நம்பிக்கையும் வைத்து, தங்களிடம் ஒப்புவித்த மந்தைக்கு நல்ல மாதிரிகளாய் திகழ்ந்து, தங்கள் சபை மக்களை ஆவிக்குரியவர்களாய் கெம்பீரமாய் நடத்த முடியும்!!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## அர்ப்பணத்தில் 'கொஞ்சம் ஒளித்து வைப்பது' தெய்வ அன்பு அல்ல!

*டோனாவூர் ஆசிரமத்து மக்களோடு அன்போடு பழகி, அவர்களோடு ஐக்கியப்பட நாடுவேன். ஆகிலும், அவர்களில் பெரும்பாலோர், இந்த சாதாரண ஆசிரம வாழ்க்கையில், தங்கள் முழுமையையும் கர்த்தருக்கு அர்ப்பணிக்காமல் வாழ்ந்ததைக் கண்டு, மனதில் வேதனை கொண்டேன்.*

*ஆனால் நானோ, மற்றொரு சமயத்தில், என்னுடைய சொந்த நிர்ப்பந்த நிலையை காணும்படி கர்த்தர் கிருபை செய்தார். சில சூழ்நிலைகளில், சிலவற்றைக் குறித்து, எனக்கென்று ஒரு விருப்பதை என் உள்ளம் வைத்துக்கொண்டதை நான் கண்டறிந்தேன். என் ஆண்டவர் இயேசுவோ, என்மீது கொண்ட மிகுதியான அன்பினிமித்தம் தன் முழுமையையும் எனக்காக ஒப்புக்கொடுத்தார், அல்லவோ! விட்டார். அவ்வாறே பிதாவாகிய தேவனும் 'தன் நேசத்திற்குரிய' ஒரேபேறான குமாரன் என்றும் பாராமல், அவரைத் தந்தருளி என்னை முழுமையும் அன்புகூர்ந்ததும், விந்தையல்லவோ!*

**ஆனால், நானோ என்னை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புவிப்பதில் கொஞ்சம் விருப்பத்தை என் மனதில் மிச்சம் பிடித்து வைத்திருக்கிறேன் என்பதை**

**கர்த்தர் சுட்டிக் காட்டினார். அதிகபட்சம் கொடுத்துவிட்டு, அந்த கொஞ்சத்தை எனக்குள் வைத்திருப்பது தெய்வ அன்பு அல்ல என போதித்தார்!**

*நான் ஒளித்து வைத்திருந்த விருப்பம், வலிமையாய் இருந்ததையும் கண்டேன். என்னை அறியாமலே, என் ஜெபத்தில் 'இந்த விருப்பத்தைத் தவிர மற்ற அனைத்தும் உமக்கே' என ஜெபிப்பதைப் போல், என் மனதில் தோன்றியது. இவ்வாறு என் உள்ளத்தில் மறைத்து வைத்த 'ஆனாலும்' என்ற பின்தங்கும் வார்த்தை, கல்வாரி அன்புக்குரியது அல்ல என்பதை உணர்ந்து, நான் மனந்திரும்பினேன். இவ்வாறாக நான் திருந்தி, கல்வாரி அன்பில் வளர்ந்ததே, என் ஆசிரமத்து மக்களை கைவிடாது பாதுகாக்கும் கல்வாரி அன்பின் வலிமையாய் மாறியது!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## அவர்கள் பெற்ற 'தேவ நீதி' ஏன் நிலைநிற்கவில்லை?

*'தேவ வசனத்தை விதைப்பவன்' என்றே இயேசு 'விதைக்கிறவன்' உவமையில் குறிப்பிட்டார்! "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்! பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்!" என கூறும் 2கொரிந்தியர்.9:6-ம் வசனத்தை, ஒருவன் தான் பெற்ற சுவிசேஷ நன்மைகளைப் பிறருக்கு கொடுத்து விதைத்திட வேண்டும், என அறிந்திட வேண்டாமோ? இந்த வசனம், சுவிசேஷத்தை விதைப்ப வர்களைப்பற்றித்தான் கூறப்பட்டுள்ளது. அதாவது, இவர்கள் 'சிறுக' வாவது விதைத்தவர்கள்! என்பதுதான்!*

*லேகியோன் பிசாசு பிடித்தவன் குணமடைந்தவுடன், அன்று அவன் பெற்ற விடுதலையை, அவன் வீட்டாருக்கும், அவன் ஊராருக்கும் அறிவிக்கும்படி இயேசு கூறிச் சென்றார்! சிறுக பெற்ற 'இரட்சிப்பை' பிறருக்கு அறிவிக்க தீவிரித்தவன், நிச்சயம் 'அதிகம்' பெறுவான், என இயேசுவுக்குத் தெரியும்! ஆனபடியால்தான், ஊரை விட்டே வெளியேறி, உம்மைப் பின்பற்றுகிறேன் என கூறிய அவனை, தன் வீட்டாருக்கும், சொந்த ஊருக்கும், அவன் பெற்ற சுவிசேஷத்தை அறிவித்திட இயேசு திருப்பி அனுப்பிவிட்டார்!*

**கட்டளையை ஏற்றுக்கொண்டு, நற்செய்தி அறிவித்திட ஊருக்குச் சென்றவன், நிச்சயமாய் இயேசுவின் சீஷனாய், சிலுவையெடுத்து, அவரது ஜீவனுக்குள் அபரிதமாய் பிரவேசித்திருப்பான்! பெற்ற சுவிசேஷத்தில் கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாய் இருந்த அவன், நிச்சயமாய் சம்பூர்ண சுவிசேஷம் பெற்று, அதை மற்றவர்களுக்கும் அறிவித்திடும் பாக்கியம் பெற்றிருப்பான்!**

*புதிய ஏற்பாட்டில் இயேசு குறிப்பிடும் 'தரித்திரர்கள்' அவரது சுவிசேஷத்தை அறியாத தரித்திரர்களையே குறிப்பிட்டார். எனவே இந்த அதிகாரம் 9-ம் வசனம் குறிப்பிடுகிறபடி* **"ஏழைகளுக்கு வாரிக் கொடுத்தான்! அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிலைத்து நின்றது!"** *என்பது, பணத்தை அல்ல.... ஒருவகையில் பணத்தை கொடுப்பது எளிது! ஆனால், தன் நண்பனுக்கு சுவிசேஷத்தினால் பெற்ற 'ஜீவியத்தைக் கொடுப்பதே' சிறந்த தெய்வ அன்பு என, இயேசு யோவான் 10-ம் அதிகாரத்தில் கூறினார்! அபிஷேகத்தால் நிறைந்த இயேசு, இவ்வாறாகவே, நித்திய நன்மைகளை "தரித்திரருக்கு சுவிசேஷமாகப் பிரசங்கித்தார்!".*

*இவ்வாறு, தான் பெற்ற சுவிசேஷத்தை மகிழ்வுடன் பிறருக்கு கொடுத்தவர்கள், 'எல்லாவற்றிலும் எப்பொழுதும்' சம்பூரணமுடையவர்களாய் இருப்பார்கள்! என்றும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுவார்கள்! என்றும், வல்லதேவன் அவர்களிடத்தில் சகலவித கிருபைகளையும் பெருகச் செய்வார் என்றும் 8-ம் வசனம் பூரிப்புடன் கூறும் பாக்கியத்தை நாம் இழப்பது சரிதானோ? 13-ம் வசனம் கூறும் "இவர்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கீழ்ப்படிதலுடன் அறிவித்தார்கள்!" என கூறும் கீழ்ப்படிதல் நம் யாவருக்கும் நிறைவேற வேண்டாமோ?*

*இங்கு நீங்கள் எச்சரிக்கையாய் கேட்க வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால்: "சுவிசேஷம் பெறாத தரித்திரர்களுக்கு, வாரியிறைத்து கொடுத்தபடியால்,* **அவனுடைய நீதி நிலைநின்றது!"** *என்ற பாக்கியம்தான்!*

> **கிறிஸ்தவ ஜீவியத்தில், இன்று மங்கி வரும் முக்கியபகுதி என்னவென்றால் "முடிவுவரை நிலைத்திருப்பதுதான்!" ஆகவே, தாங்கள் பல வருடங்களாய் கான்பரன்ஸ் கூட்டங்கள்..... புத்தகங்கள், கேஸட்டுகள் என கேட்டு, கேட்டு சத்தியம் பெற்றதாக கூறும் அனேகர், தாங்கள் அதை 'பிறருக்கு மனப் பூர்வமாய், வாரிக் கொடுக்காதபடியால்' அவர்கள் பெற்ற சம்பூர்ண சுவிசேஷத்தின் நீதி, நிலைநிற்கவில்லை!**

*அன்று அவர்கள் பெற்ற 'பாவத்தின்மீது வெற்றி' 'தாழ்மை' 'பரிசுத்தம்' 'அன்பு, ஐக்கியம்' போன்ற எண்ணற்ற நற்குணங்களில் 'பூச்சி அரித்து விட்டது!' அது நிலைநிற்கவில்லை என்ற பரிதாபத்தை காண்கின்ற நாம், எச்சரிப்படையக்கடவோம்! பிறருக்கு, பெற்ற சுவிசேஷத்தை அறிவிப்பதை கடமையாக மாத்திரமல்லாமல் "மகிழ்வுடன், உற்சாகத்தோடு கொடுத்திட" நாம் எல்லோரும் தீவிரம் கொள்ளக்கடவோம்!*

*– T. ரத்தினகுமார்*

## ரோமானிய புனிதவதி **சிஸிலியா,**
### அவிசுவாசியை மணந்திட மறுத்து உயிர் நீத்தவர்!



**( AD 200-235 )**

**ரோ**மாபுரியில் பல்வேறு பாமாலைகள் எழுதி, அதைத் தானே இசைத்து, வயலின், கிண்ணரம், ஆர்கன், புல்லாங்குழல் ஆகிய பல்வேறு இசைக் கருவியில் கர்த்தரை பாடிப் புகழ்ந்த உத்தம பெண்மணி. **தன் இளம் கன்னிப் பருவத்தை கர்த்தருக்கு அர்ப்பணித்திட தீர்மானித்து உறுதி கொண்டிருந்தார்.** அச்சமயத்தில் அவளுடைய பெற்றோர்கள், அவளை திருமணத்திற்கு கட்டாயப்படுத்தினார்கள். அதுமாத்திர மல்லாமல், அவளுக்கு நியமிக்கப்பட்ட கணவன், புறஜாதி பிரபு வம்சத்தை சேர்ந்த ‘வல்லேரியன்’ என்பவனாவான்.

திருமண நிகழ்ச்சிக்கு சிஸிலியா கொண்டு வரப்பட்டபோது தன் பைப் ஆர்கனில் அமர்ந்து, தன்னை அர்ப்பணித்த தேவனுக்கு முன்பாக “உள்ளத்தில் கீதம் பாடி” அதை பைப் ஆர்கனில் இசைத்து, திருமண அரங்கை சோகத்தால் ஸ்தம்பிக்கச் செய்தார். திருமண திருப்பூட்டுதல் நேரம் நெருங்கியவுடன் திருமணம் செய்யப் போகும் வல்லேரியனிடம் “என் கன்னிப் பருவத்தை தேவனுக்கு ஒப்புவித்த ஸ்திரீ நான்! ஆகவே கர்த்தருடைய ஒரு தூதன் என்னைக் காவல் காத்து வருகிறார். நீர் என் கன்னித்தன்மையின் புனிதத்தை மதித்தால், கர்த்தர் உன்னை அன்புடன் நடத்துவார். அதற்குப் பதிலாக என் கன்னிப் பருவத்தை நீ பலாத்காரம் செய்ய முயற்சித்தால், என்னை காக்கும் கர்த்தருடைய தூதன் உன்னை தண்டிப்பார்” என கூறினார். அதற்கு வல்லேரியன் “எங்கே, உன்னை காக்கும் தூதனை எனக்கு காட்டு” என கூறினான். அதற்கு சிஸிலியா “நீ மூன்று மைல் கல் அளவு தூரம் சென்று ‘அர்பன் போப்’ மூலமாய் ஞானஸ்நானம் எடுத்து விட்டு, அங்கிருந்து என்னைப் பார். அப்போது உண்மை விளங்கும்” என கூறியதும், அவனும் அப்படியே செய்தான். தூரத்திலிருந்து பார்த்த வல்லேரியன், சிஸிலியாவிற்கு பின்புறம் ஒரு தூதன் நிற்பதையும், சிஸிலியாவிற்கு முடிசூட்ட லில்லி மலர்களாலும், ரோஜா மலர்களாலும் பின்னப்பட்ட மாலையை அவளுக்கு கிரீடமாய் சூட்டுவதற்கு ஆயத்தமாயிருந்ததையும் கண்டான். இவ்வாறு திருமணம் நின்று போனது.

ஆகிலும், அந்த வல்லேரியன் சும்மா இருக்காமல், தன் சகோதரன் திபூர்சியஸ் உடன் சேர்ந்து ‘அல்மாசியஸ்’ என்ற இளவரசன் காலத்தில் அவளை கொலை செய்ய வகை தேடினான். அதன் விளைவாய், அவள் கழுத்தில் பட்டயத்தால் மூன்று முறை தாக்கப்பட்டாள். ஒரு சில தினத்தில், மரிக்கும் தருவாயிலிருந்த சிஸிலியா, தன் மரணத்திற்குப் பிறகு, தனக்கு தரப்பட்ட மாளிகையை தேவாலயமாக மாற்றும்படி கூறி ஜெயமாய் மரித்தாள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே, உன் காலத்தை நித்தியத்திற்கு செலவிடு!

வாலிபர்களே, ஒன்றை நீங்கள் எப்பொழுதும் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய ஜீவனுள்ள நாமத்தின் பிரபல்யத்திற்கென்று நீங்கள் மனப்பூர்வமாக, கல்வாரி அன்பால் ஏவப்பட்டுச் செலவிடாமல், சுயநல நோக்கத்தோடு சேர்த்துக் குவித்து வைக்கும் உங்கள் திரண்ட ஐசுவரியத்தால் நீங்கள் இறுதியில் அடையப் போவது, ஒன்றுமில்லை!

நமது வாழ்நாட்காலம் விரைவாக ஓடி, மெழுவர்த்தியைப் போலக் கரைந்து மறைந்துகொண்டிருக்கின்றது. நம்மில் அநேகர் காலத்தின் அருமையை இன்னமும் அறிந்து வாழவில்லை. கர்த்தர் நமக்கு கிருபையாகக் கொடுத்த சிறிய ஆயுட்காலத்தை அவரது ஜீவனுள்ள நாம மகிமைக்கென்று மாத்திரமே நாம் செலவிடக் கடனாளிகளாயிருக்கின்றோம். இவ்வுலகத்தில் எவ்வித நோக்கமுமின்றி வீணே தங்கள் நேரத்தைப் பாழ்கடித்து வாழும் உலக மக்களைப்போல, நாம் வாழாமல், நமது பொன்னான நேரத்தைக் குறித்து கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

இளம்பிராயத்தில், தேவன் நமக்கு ஈவாகக் கொடுத்துவரும் ஒவ்வொரு மணி நேரத்திற்காகவும் அவருக்கு நம் இதயத்தின் அடித்தளத்திலிருந்து நன்றி கூறி, அந்த மணி நேரங்களையெல்லாம் கர்த்தருக்காகவே செலவிடுவதில் கருத்தாயிருங்கள்!

உங்கள் வலிமையான ஜீவிதக் கப்பல், நித்திய ஜீவகரையை எட்டிப் பிடிக்கும் முன்னர், உங்கள் சரீர பெலன் குன்றிப் போகுமுன்னால், உங்கள் கண்ணின் பார்வை மங்கலாகுமுன், கர்த்தர் கிருபையாகக் கொடுத்த உங்களின் இளமையான வாழ்நாள் காலத்தை, பரம தந்தையின் சுவிசேஷப் பணிக்கும், ஆத்தும ஆதாய அறுவடை பணிக்கும் முழுமூச்சாய் அர்ப்பணியுங்கள்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by Jemi Printers, Madurai. Editor T.Rathnakumar, Madurai.